| Publication: Dhina Idhazh | Page No: 03 |
|---|---|
| Date: 19-11-2016 | Edition: Chennai |



தினஇதழ்

### வி.ஹெச்.எஸ்.மருத்துவமனை - ராஜலட்சுமி கல்லூரி

# பயோமெடிக்கல் ஆராய்ச்சிக்கு ஒப்பந்தம்



சென்னை.நவ.18–

ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி மற்றும் வி.ஹெச்.எஸ். மருத்துவமனை இடையே பயோமெடிக்கல் துறையில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை தரமணியில் உள்ள வி.ஹெச்.எஸ். பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையுடன், ராஜலட்சுமி பொறியியல் கல்லூரியில் பயோமெடிக்கல் இன்ஜினியரிங் பயிலும் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கான ஒப்பந்தம் சென்னையில் நேற்று கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் ராஜலட்சுமி பொறியியல் கல்லூரியின் தலைவர் தங்கம் மேகநாதன், வி.ஹெச்.எஸ். பல்நோக்கு மருத்துவமனை செயலாளர் டாக்டர் சுரேஷ், இயக்குநர் சர்தார் ஆகியோர் கையொழுத்திட்டு அதற்கான ஒப்பந்தத்தை பரிமாற்றம் செய்து கொண்டனர்.

இது குறித்து ராஜலட்சுமி பொறியியல் கல்லூரியின் தலைவர் தங்கம் மேகநாதன் தெரிவிக்கையில், ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி மற்றும் ராஜலட்சுமி தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிலும் இளங்கலை, முதுகலை மாணவர்களுக்கு தரமான கல்வி அளிக்கப்படுவதுடன், ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் மாணவர்களுக்கு தரமான கல்வியுடன், அது குறித்து பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது வி.ஹெச்.எஸ். பல்நோக்கு மருத்துவமனையுடன் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் மூலம் 2, 3, 4ம் ஆண்டில் இளங்கலை பொறியியலில் பயோமெடிக்கல் பிரிவில் பயிலும் மாணவர்கள் மருத்துவமனைக்கு நேரில் சென்று மருத்துவ உபகரணங்கள் குறித்து நேரடியாக பயிற்சியை மேற்கொள்வார்கள். இந்த பயிற்சிக்கு எங்கள் கல்லூரியில் பயோ மெடிக்கல் பிரிவில் பயிலும் மாணவர்கள் 660 பேர் செல்ல உள்ளனர்.

மேலும் வி.ஹெச்.எஸ்.பல்நோக்கு மருத்துவமனையுடன் இணைந்து பல்வேறு கருத்தரங்கை நடத்தவும், ஆராய்ச்சியை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் பயோமெக்கானிக்கல் படித்து முடித்து செல்லும் மாணவர்கள் மருத்துவமனைக்கு சென்றவுடன் மருத்துவ உபகரணங்களை எளிதாக கையாள முடியும் என கூறினார்.

வி.ஹெச்.எஸ்.மருத்துவமனையில் செயலாளர் சுரேஷ் கூறும்போது,பயோமெடிக்கல் பொறியியல் படிப்பினை முடிக்கும் மாணவர்களுக்கு மருத்துவ உபகரணங்களை பழுது பார்த்த அனுபவம் முக்கியமாக தேவைப்படுகிறது. குறைந்தது 100 படுக்கைகள் உள்ள மருத்துவமனையில் ஒருவரும், 50 படுக்கை கொண்ட 2 மருத்துவமனைகளுக்கு ஒருவரும் நியமிக்க வேண்டும் என விதிகளில் உள்ளது. புதிய மருத்துவ உபகரணங்கள் தினமும் வந்துக் கொண்டு இருக்கின்றன.

அவற்றை மருத்துவர்களும் கற்று வருகின்றனர். மருத்துவ உபகரணங்கள் சரியாக செயல்படாவிட்டால் நோயினை சரியாக அறிய முடியாது.

எனவே பயோமெடிக்கல் இன்ஜினியரிங் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதுடன், இது குறித்து ராஜலட்சுமி பொறியியல் கல்லூரியுடன் இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்ள உள்ளோம் என கூறினார்.